# இதிஹாஸ புராணங்களில் இடம்பெற்றதும் சரித்திரப் பெருமைவாய்ந்ததுமான

# ஸ்ரீ முன்னேஸ்வர சிவஸ்தலம்

ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திரம் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக உ கிலோமீற்றர் தொலைவில் குருணாகல் வீதியில் இயற்கை வனப்புக்களின் மத்தியில் மிகவும் உயர்ந்த விமானத்தோடு புதுப்பொழிவுடன் திகழ்கின்றது.

இத்தரத்தில் ஸ்ரீ வடிவாம்பிகா தேவி சமேதராக ஸ்ரீ முன்னைநாத சுவாமி அருளாட்சி செய்து கொண்டிருக்கின்றார்.

சிறப்புமிக்கதாகப் போற்றப்படும் பஞ்ச ஈஸ்வரங்களான இராமேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம் , நகுலேஸ்வரம் ஆகியனவற்றுள் இராமேஸ்வரம் தவிர்ந்த ஏனைய ஈஸ்வரங்கள் இலங்கையைச் சார்ந்தவை.அவற்றுள் முனீஸ்வரம் எல்லா ஈஸ்வரங்களுக்கும் காலத்தால் முற்பட்டது.இதனை The ancient pagoda of Munucarao (P.427) எனும் நூலில் De Quegros என குறிப்பிட்டுள்ளார்.

வடமொழி ஸ்காந்த மஹா புராணத்தின் உத்தர காண்டத்தில் இடம்பெறும் தக்ஷிணைகைலாய மஹாத்மியத்தில் 16ம், 17ம் அத்தியாயங்களில் முறையே முன்னேஸ்வர ஷேத்திரத்தின் ஆதிவரலாறு, ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஏற்பட்ட பிரம்மஹத்திதோஷ விமோசனம் பற்றி கூறப்படுகின்றது.இவ்வாறு கூறப்பிடுகையில் ஆலயத்தின் பெயர்ச்சிறப்புப் பற்றி ஸ்ரீசூதர் முனிவர்களுக்கு கூறுகையில்:

‘சேதுக்கடலின் மத்தியில் சிங்கள தேசத்தில் அநேகமான ஷேத்திரங்கள் உள்ளன. முனிவர்களே! அவற்றுள் மூன்று முக்கியமானவை.மேலான பொருளுடைய அவைகளின் பெயர்களைக் கூறுகின்றேன். ஸ்ரீமத் தக்ஷிணைகைலாயம் (திருகோணமலை ) பக்தர்களுக்கு விருப்பத்தையும் முக்தியையும் அளிக்கவல்லது.அங்கு கோணேச மஹாலிங்கம் உள்ளது.கேதீஸமகாலிங்கமானது நினைப்பதால் எல்லா விருப்பங்களையம் அளிக்கவல்லது.முனீஸ்வர மஹாஷேத்தரமானது கேள்வியுற்றாலே எல்லா சித்திகளையும் அளிக்கவல்லது.அங்கு முன்னைநாதா் என்றழைக்கப்படும் மேலான சுயம்புலிங்கம் உள்ளது.பிரம்மா, விஷ்ணு, மஹேந்திரன் முதலியோரால் பூஜிக்கப்பட்டு சித்தி கிடைக்கப்பெற்றது. அதனால் முன்னேஸ்வர ஷேத்திரம் மேலானவற்றுள் மேலானது.என விபரித்தார்.

(வடமொழி தக்ஷிணைகைலாய மஹாத்மியம் xvi.6 – 11)

மேலும் இந்த ஷேத்திரத்திரத்தின் சிறப்புப்பற்றி கூறுகையில்,

‘வாரணாசி (காசி) முதலிய தேசங்களில் தேஹவியோகத்தின் பின்னா் முக்தி எனக்கூறப்படுகின்றது. முனீஸ்வர ஷேத்திரத்திரத்திலே எப்போதுமே மனிதர்கள் ஜீவன்முக்தர்கள் ஆகின்றார்கள். எனவே முன்னேஸ்வரத்தை ஒத்த ஷேத்திரம் மூவுலகிலுமில்லை’

(வ xvi.14 – 16) என்றார்.

மேலும் ஆவலூட்டப்பெற்ற காசியில் வசிக்கும் முனிவர்கள் நந்திகேஸ்வரரை அணுகி முனீஸ்வர ஸ்தலத்தின் அமைவிடத்தைப் பற்றி வினாவ,

‘ பரிபூரணரான சிவ சங்கரர் எல்லோருக்கும் இட்ட சித்தியை அளிப்பதன் பொருட்டு எப்பொழுதும் சாந்நித்தியமாக இருக்கின்றாா. மிக நீண்டகாலமாக விளங்கும் ஸ்தானம் அழைக்கப்படுகின்றது. முனிவர்களே! இம் முனீஸ்வர ஸ்தலம் கன்யாகுமரிக்கு கிழக்காகவம், இராமசேதுக்கு தெற்காகவும், காமாசலத்திற்க வடமேற்காகவும்,திரிகோணசலத்திற்கு தென்மேற்காகவும் அமைந்து விளங்குகின்றது.’

( வ xvi 65 – 67) என நந்திகேஸ்வரர் விடை கூறினார்.
இவ்வாறான சிறப்புப்பெற்ற முனீஸ்வரப்பெருமான் மீது வியாசபகவான் பத்தொன்பது ஸ்தோத்திரங்களையும் ( xvi – 113 – 132) வடிவாம்பிகாதேவி மீது எட்டு ஸ்தோத்திரங்களையும் (வ xvi- 94 – 101) பாடியுள்ளார் என்பது குறிப்படத்தக்கதாகும்.

ஸ்ரீ இராமபிரான் பிரம்மஹத்தி தோஷம் நீக்கப்பெற்ற சிறப்புக்களினை தக்ஷிணகைலாய மஹாத்மியம் 17ம் அத்தியாயம் கூறி நிற்கின்றது. இதன் மூலம் ஸ்ரீராமச்சந்திரருக்கும் இத்தலத்திற்குமான தொடர்பு தெளிவுபடுத்தப்படுகின்றது. இராமபிரான் இராவணனை சம்ஹாரம் செய்வதற்கு முன்பு இங்கு வழிபட்டுச் சென்றார். ஏன சேர்.பொன் அருணாசலம் முதலியார், சி.இராசநாயகம் ஆகியோர் தமது நூல்களில் குற்ப்பிடுகின்றனர்.

'இராமயணத்தில் இலங்கையில் இருந்த கோயில்களைக் கூறுவதைச்சுட்டிக்காட்டி, தென்னிந்தியாவில் தெய்வத்திருவுருவங்கள், கோயில்கள் இருந்தன என T.A கோபிநாதராயோ என்பவர் தமது நூலில் (Elements of Hindu Iconography Vo1.1 Part 1, page.5) சுட்டுகின்றார்.

இக்கருத்து மூலநூலில் இன்று வரை அறியப்படாததொன்றெனினும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் இத்தலத்திற்கு உண்டு. என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இத்தலம் சிவமஹா புராணத்து சனத்குமார சம்ஹதையில் அலகேஸ்வரம் எனச் சுட்டப்படுகின்றது.மேலும் பத்மபுராணத்திலும் மார்க்கண்டெய புராணத்து காமாக்ஷிவிலாசம் எனும் அத்தியாயத்தில் நான்கு சக்தி பீடங்களில் இத்தலமும் ' ஸ்ரீ லங்காபீட ' என அறுபத்துநான்கு சக்திபீடங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.இதனையே' செயின் நிகாலி சிங்' (seint nihol singh)எனும் ஞானியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதிஹாச புராணச்சிறப்ப மிக்க .இத்தலத்தோடு வடிவழகி அம்பாள் பற்றியதும் சந்திரகுலத்து அருச்சுனன் மனைவி அல்லிமஹாராணி சிலாபத்தில் முத்துக்குளிக்கும் காலத்தில் மூன்றில் ஒரு பகுதியை அளித்தது பற்றியதுமான கர்ணபரம்பரைக் கதைகளை இங்குள்ள ஊர்கள் இப்பொழுதும் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

முன்னேஸ்வர ஷேத்திரத்தின் வரலாற்றுப் பின்னனியில் சோழ வம்சத்து சூரியகுல வராமதேவசோழ மஹாராஜாவின் மகன் குளக்கோட்டன் முன்கேஸ்வரத்திலும் திருப்பணிகள் செய்து வைத்தான் என முன்னெஸ்வர மான்மியம் தெரிவிக்கிறது.

இலங்கை வரலாற்றில் கி.பி.15ம் நூற்றாண்டில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி.1410 – 1462) இக்கோவிலின் சிதைவடைந்த பகுதியினைத் திரப்பணி செய்து பல கிராமங்களை மானியமாக அளித்து சிலாசாசனமாக தெரிவித்ததனை ஆலயகர்ப்பக்கிரகத்தின் அடிப்பாகத்திலே மேற்கு வடக்குப் புறங்களில் இன்றும் காணலாம்.என்பது குற்ப்பிடத்தக்கது.இச்சாசனத்தை G.M.FOWLER என்பவர் முதலில் வாசித்தார். இதனை கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை 1971ல் சில மாற்றங்களுடன் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.(பார்க்க Tamil Incriptions –Part.1 Dr.A.Veluppillai- 1971 page 37- 43)

ஓன்பதாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி.1509 – 1528) கி.பி.16ம் நூற்றாண்டில் கி.பி.1517ல் இக்கோவிலிற்கு பர கிராமங்களை சர்வ மானியமாக தாமிரசாசனம் செய்து வைத்தான்.

மகோன்னதமாக விளங்கிய முன்னேஸ்வரத்தை போர்த்துக்கேயர்கள் கி.பி.1578 ல் தரைமட்டமாக்கினர். பின்னர் கி.பி.18ம் நூற்றாண்டில் கண்டியில் ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீராஜசிங்க மன்னன் (கி.பி.1741 – 1782) 175 ஆண்டுகள் சின்னாபின்னமாயிருந்த ஆலயத்தினை இந்திய சிற்பாசிரியர்களை அழைப்பித்து திருப்பணிகள் மூலம் புணரமைத்து கி.பி.1753 ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தான். அவனே கோயிலின் நித்திய நைமித்தியங்களுக்காக குருமாருக்கு நெல்விளைநிலங்களை கி.பி.1753 ம் ஆண்டிலேயே செப்புப்பட்டயம் எழுதிக்கொடுத்தான்.

அதன்பின்னர் மிக நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் காடுபடர்ந்த நிலையில் இருந்த இக்கோவிலினை சிவஸ்ரீ நா.குமாராஸ்வாமிக்குருக்கள் அத்திவாரம் முதலாக மீண்டும் புனருத்தாரணம் செய்து கருங்கற்திருப்பணியாகவே 1875 ம் ஆண்டு கும்பாபிஷேகத்தினைச் செய்துவைத்தார்.

இத்தலத்தில் தினமும் ஆறு காலப்பூசைகள் நேரம் தவறாது ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றது. மேலும் வார, பக்ஷ, மாஸ விஷேஷங்களும் கிரமமாக நடைபெற்று வருகின்றன.அவற்றுள் பிரதோஷ பூஜையும், சாக்ததந்திர முறைப்படி அமைந்த பூரண மேருயந்திரத்திற்கு பௌர்ணமி தினத்தன்று நடைபெற்றுவரும் ஸ்ரீசக்ர பூஜையும் சிறப்பு மிக்கது.

முன்னேஸ்வரத்திற்கேயுரிய சிறப்புக்களுடன் வருடந்தோறும் வடிவழகி அம்பாளுக்குரியதாக பங்குனிமாதத்தில் வசந்தநவராத்திரி காலத்தில் நடைபெற்றுவரும் சண்டீஹோமம், அபிஷேகம், ஸ்ரீசக்ரபூஜை என்பனவும்: சாரதா நவராத்திரி காலத்தில் நடைபெற்றுவரும் 108 சங்காபிஷேகம், ஸ்ரீ சக்ரபூஜை என்பனவும் எங்கும் காணுதற்கரிய சிறப்புமிக்கவை.

தைப்பூசத்தை இறுதிநாளாகக் கொண்ட பதினைந்து தின லக்ஷார்ச்சனையும் குறிப்பிடத்தக்கது.

உற்சவங்களுள் மாசி மாதத்து பௌர்ணமியை இறுதியாகக்கொண்ட ஒன்பது தின பிரமோற்சவமும், ஆவணி மாதத்து பௌர்ணமியை இறுதியாகக் கொண்ட 27 தின மஹோத்சவமும் சிறப்புடையன.

இவ்வாறான சிறப்புமிக்க விஷேட வைபவங்களுள் இவ்வருடத்திற்கான ஆவணி மாதத்து பௌர்ணமியை இறதித்தினமாகக் கொண்ட மஹோத்சவம் 2011ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் திகதி (ஆடி 31)செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவத்தில் சாகல்யம் எனும் துவஜாரோஹணம் முதல் தீர்த்தம் வரையில் நடைபெறும். உற்சவ பேதத்தினுள் சௌக்கியத்தைக் கொடுக்கக்கூடியதும் உத்தமமானதுமான சௌரம் எனப்படும் 27 தின மஹோத்சவம் இங்கு தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றது. இதனை ஸ்ரீமத் உத்தரகாரணாகமம் விரித்துக் கூறுகின்றது.

சிவாகம முறைப்படி ஆலயத்தின் கருவறையில் உள்ள மூலவர் 'உற்சவ மூர்த்தி' என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிப்புறத்தில் வெளிவருவதற்கு 'உற்சவம்' என்பது பெயர். சுவாமி வீதியில் வருவதால் ஆன்மாக்களுடைய பாவபுண்ணியங்களுக்கீடாக தனு – கரண – புவண – போகங்களைத் தோற்றுவித்து கிரமமாக சிருஷ்டி, ஸ்திதி, லயம், திரோபவம், அனுக்கிரகம் எனும் பஞ்சகிரத்தியங்களையும் ஆன்மாக்கள் உய்ய இறைவன் செய்கின்றார்.

இவ்வாறான சிறப்புடைய உற்சவத்தில் ஸகுண பிரமமாக அமைந்த 25 சிவமூர்த்தி பேதங்களுள் சிருஷ்டி கிருத்தியத்தில் ஒன்றாக வியங்கும் சோமாஸ்கந்த மூர்த்தியே இத்தலத்தில் தினமும் எழுந்தருளுவது எங்கும் காணுதற்கரிய தனிச்சிறப்பாகும்.

முன்னேஸ்வரத்திற்கே உரிய சிறப்புடைய உற்சவங்களில் மஹாவிஷ்ணு திருவிழா 06.09.2011 செவ்வாய்க்கிழமையும், சிவனடியார் திருவிழாவும் தீமிதிப்பும் 07.09.2011 புதன்கிழமையும் , பிஷாடனர் திருவிழா 08.09.2011 வியாழக்கிழமையும், நடேசர் திருவிழா 09.09.2011 வெள்ளிக்கிழமையும், வேட்டைத்திருவிழா 10.09.2011 சனிக்கிழமையும், தேர்த்திருவிழா 11.09.2011 ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத்திருவிழா 12.09.2011 திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

இங்கு நடைபெறும் தீர்த்தோற்சவம் புராணத்தோடு தொடர்புடைய சிறப்புடையது. அதனை தக்ஷிணகைலாய மஹாத்மியம், மோஹினி ரூபங்கொண்ட விஷ்ணுமாயவன் ஆறாகவும், பிக்ஷாடன் ரூபங்கொண்ட சிவன்முன்னைநாத சுவாமியாகவும் அரிஹரபுத்திரத்துவத்தினை உணர்த்துதலின் பொருட்டு விஷ்ணு சிவனை வேண்ட சிவன் 'இந்த இடத்தில் ஆறாக பிரவகித்துக்கொண்டிரு', நாம் வருடந்தோறும் வரும் ஆவணி மாதம் பூரணையில்

வந்து உன்னைக் கலப்போம் எனும் வாக்குறுதி அளித்தார்.எனும் சாரத்தடன் கூறுகின்றது. இச்சிறப்பினை இன்று வரை தீர்த்தோற்சவத்தில் உணர்ந்த கொள்ளக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான சிறப்புமிக்க மஹோத்சவத்தில் தீரத்தோற்சவத்தையடுத்து துவராஜரோஹணம் 7.9.98 திங்களும், பூங்காவனம் 8.9.98 செவ்வாயும், சண்டேஸ்வரர் உத்சவம் 9.9.98 புதனும் பிராயச்சித்த அபிஷேகம் 10.9.98 வியாழனும் வைரவர் மடை 11.9.98 வெள்ளியும் தொடர்ந்து நடைபெற இருக்கின்றன.

முன்னேஸ்வரத்து உற்சவ காலங்களில் உபயம் செய்வோர் ஊர்கூடிச் செய்வதும்: இன, மத, மொழி பேதமற்று எல்லோரும் வந்து அருள்பெற்று நிற்பதும் எல்லோருக்கும் ஆனந்தத்தினை அளிக்கின்றது.

இவ்வாறான இன்னோரன்ன சிறப்புக்களையுடைய முன்னேஸ்வர மஹோத்சவத்தினை நாம் எல்லோரும் கண்ணாரக்கண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்வோமாக!

போற்று முனீசன்றன் பென்னடியை நெஞ்சே நீ

மாறும் பிறவி மயல்.

– முனீசுவரர் நவமணிமாலை –